**தமிழ்நாடு பள்ளிக்கல்வி ஆணையரின் செயல்முறைகள், சென்னை –6.**

**ந.க.எண். 019527 /எம்/இ1/2022, நாள்.06.08.2022.**

பொருள்: பள்ளிக்கல்வி – 2022–2023 ஆம் ஆண்டில் அனைத்து வகை அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் விழிப்புணர்வு வாரம் – மாணவர்களின் உடல் / மன நலன் காக்க சிறப்புப் பயிற்சிகள் – பின்பற்றப்பட வேண்டிய வழிமுறைகள் – மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அறிவுரைகள் – தொடர்பாக.

பார்வை: 2022–2023 ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கை எண் 43ன் மீது 11.04.2022 அன்று மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் அறிவிப்புகள்.

******

அரசுப் பள்ளிகளில் கல்வியின் தரம், மாணவர் நலன், மகிழ்ச்சியான கற்றல் சூழல், ஆசிரியர்–மாணவர் நல்லுறவு மேம்பட தமிழ்நாடு அரசு பல திட்டங்களை அறிவித்துத் திறம்பட நடைமுறைப்படுத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக, மாணவர்களின் ஒட்டுமொத்த முன்னேற்றத்திற்கு உதவும் வகையில் உடல்நலன் மற்றும் மனநலத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான அமர்வுகள் பள்ளிகளிலேயே நடத்த தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2022–2023 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டார்.

"2022–2023 ஆம் கல்வி ஆண்டின் முதல் வாரத்தில் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மனநலம், குழந்தைகள் மீதான வன்முறையைத் தடுத்தல், தன்னம்பிக்கையை வளர்த்தல், போதைப் பொருட்களுக்கு அடிமையாதலைத் தடுத்தல், தன்சுத்தம் பேணுதல் போன்ற பொருண்மைகளில் பள்ளி அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்".

**<u>பள்ளிகளில் விழிப்புணர்வு வாரம்:</u>**

உடல், மனநலம் பேணும் பள்ளிச்சூழலில் கல்வியைப் பெறும் குழந்தைகள் வாழ்க்கையில் வெற்றி வாய்ப்பைப் பெறுகின்றனர். இதற்கென, அரசுப்பள்ளிகளில் கண்ணொளி காப்போம் திட்டம், RBSK திட்டம், WIFS திட்டம் எனப் பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

கொரானா பெருந்தொற்றினால் மாணவர்களின் கற்றல் முறைகளில் குறிப்பிடத் தகுந்த மாறுதல் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் மாணவர்களின் உடல், மனநலனைக் காக்க மருத்துவக் குழுக்களைக் கொண்டு விழிப்புணர்வை ஏற்படுத்தவும், உரிய பரிசோதனைகளைச் செய்யவும், இளைஞர் நீதிச்சட்டம்,

போக்சோ சட்டம், சாலைப் பாதுகாப்பு, இணையப் பாதுகாப்பு, குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், போதைப் பொருட்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர் கல்வி உறுதித் திட்டம் போன்ற அரசு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வைப் பள்ளிகளில் ஏற்படுத்தவும் அரசு உறுதி பூண்டுள்ளது.

அனைத்து அரசு, அரசு உதவிபெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 11.08.2022 அன்று விழிப்புணர்வு உறுதி மொழி எடுக்கும் நிகழ்வும், 12.08.2022 முதல் 19.08.2022 வரை கீழ்க்காணும் துறைகளுடன் இணைந்து விழிப்புணர்வு வாரத்தைச் செயல்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

1. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை.
2. சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை / சமூகப் பாதுகாப்புத்துறை.
3. காவல் துறை.

## I. <u>மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை</u>:

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை வாயிலாக மாணவர்களுக்குக் கீழ்க்காணும் திட்டங்கள் சார்ந்து விளக்கப்படும்; தேவையான பரிசோதனைகள் செய்யப்படும்.

### i. தேசிய சிறார் நலத்திட்டம்:

பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் நடத்தப்படும் மருத்துவப் பரிசோதனைகள், பிறவிக் குறைபாடுகள், பற்றாக்குறைகள் (Deficiencies), குழந்தைப் பருவ நோய்கள், தாமதமான வளர்ச்சி மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றையும் அவற்றால் பாதிக்கப்பட்ட மாணவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை வழங்க எடுக்க உள்ள நடவடிக்கைகள் பற்றியும் விளக்கிக் கூறுதல்.

### ii. தேசிய வளரிளம் பருவத்தினர் நலத்திட்டம்:

வளரிளம் பருவத்தினருக்கு ஊட்டச்சத்து மேம்பாடு, உடலளவிலும் மனதளவிலும் ஏற்படும் மாற்றங்கள் குறித்த விழிப்புணர்வு, போதைப்பொருட்கள் குறித்த விழிப்புணர்வு வழங்குதல்.

### iii. பிற திட்டங்கள்:

10–19 வயது வரை உள்ள வளரிளம் பருவத்தினருக்குப் பிரதிவாரம் வியாழக்கிழமை மதிய உணவுக்குப்பின் இரும்புச் சத்து மாத்திரை வழங்கப்படுகிறது. 1 முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகளுக்குப் பள்ளிகளிலேயே குடற்புழு நீக்க மாத்திரை வழங்கப்படுகிறது. இத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு, திட்டத்தினைச் சிறப்பாகச் செயல்படுத்தும் வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்குதல்.

### iv. தன் சுத்தம் பேணுதல் குறித்த விழிப்புணர்வு.

II. <u>சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை / சமூகப் பாதுகாப்புத்துறை:</u>

i. சரிவிகித உணவின் முக்கியத்துவம் குறித்து எடுத்துக் கூறுதல்.
ii. குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு.
iii. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதித் திட்டம் குறித்து மாணவிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
iv. சானிடரி நாப்கின் பயன்பாடு மற்றும் அதனைப் பாதுகாப்பாக எரியூட்டுதல் குறித்த விழிப்புணர்வு.
v. இளஞ்சிறார் நீதி (குழந்தைப் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 2015 குறித்த விழிப்புணர்வு.
vi. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POCSO) குறித்த விழிப்புணர்வு.

III. <u>காவல்துறை :</u>

i. போதைப்பொருள் குறித்த விழிப்புணர்வு மற்றும் போதைப் பொருட்களுக்கு அடிமையாதலைத் தடுத்தல்
ii. சாலைப் பாதுகாப்பு
iii. பாதுகாப்பாக இணையத்தைப் பயன்படுத்துதல்; இணைய வழி விளையாட்டுகள் குறித்து விழிப்புணர்வு.
iv. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விழிப்புணர்வு.

மேற்கூறியவை மட்டுமல்லாமல் பின்வரும் பொருண்மைகள் குறித்து பள்ளிக்கல்வித்துறை தக்க விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

a. மாணவர்களுக்கான அவசர உதவி எண் Child Help Line – 1098, பள்ளிக் கல்வித்துறையின் மாணவர் உதவி எண் – 14417 குறித்த விழிப்புணர்வு.
b. பேரிடர் மேலாண்மை குறித்த விழிப்புணர்வு.

IV. <u>உறுதிமொழி எடுத்தல், விழிப்புணர்வு போட்டிகள் நடத்துதல்:</u>

11.08.2022 அன்று பள்ளிகளில் நடைபெறும் விழிப்புணர்வு வாரத் தொடக்க நிகழ்வில் வாசிக்க வேண்டிய உறுதி மொழி மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வு ஒளிப்படம் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

இவ்வாரத்தில் போதைப் பொருள் விழிப்புணர்வு குறித்து மாணவர்களுக்கான கட்டுரை, ஓவியம், வினாடி வினா மற்றும் பேச்சுப்போட்டிகள் நடத்தப்பட வேண்டும்.

அனைத்துத் துறைகளையும் ஒருங்கிணைத்து இத்திட்டத்தினைச் செவ்வனே செயல்படுத்திட மாவட்ட ஆட்சியர் தலைமையில் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் அடங்கிய குழு ஒன்றை அமைத்து, அனைத்து அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்குச் செல்ல வேண்டிய அலுவலர் (மருத்துவர்கள், காவல் உதவி ஆய்வாளர், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் எனப் பல்துறை அலுவலர்கள்) குறித்தத் தகவல்களையும் அவர்கள் பள்ளிக்குச் செல்லவிருக்கும் நாள் குறித்தத் தகவல்களையும் பள்ளிகளுக்கு முன்கூட்டியே அனுப்பி வைத்து விழிப்புணர்வு வாரத்தைச் சிறந்த முறையில் நடத்தவும், அவற்றை ஆவணப்படுத்தவும் அவ்வறிக்கையை பள்ளிக் கல்வி ஆணையரகத்திற்கு அனுப்பி வைக்கவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

6.8.22

பள்ளிக்கல்வி ஆணையருக்காக

பெறுநர்

1. காவல் துறை தலைமை இயக்குநர்,
2. இயக்குநர், பொது சுகாதாரத்துறை.
3. இயக்குநர், சமூக நலம் மற்றும் மகளிர் மேம்பாட்டுத்துறை.
4. இயக்குநர், சமூகப் பாதுகாப்புத்துறை
5. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி.

(மாவட்ட அளவில் தமது துறையைச் சேர்ந்த அலுவலர்களுக்குத் தக்க அறிவுரைகள் வழங்கிப் பள்ளிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்)

6. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
7. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.

நகல்

அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக்கல்வித்துறை,
தலைமைச் செயலகம், சென்னை – 9.